செய்தி வெளியீடு எண் : 08 நாள் : 03.10.2021

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள்**
**மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டார்:-**

*****

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பழனியப்பா வித்யாலயா தொடக்கப்பள்ளி மற்றும் கம்பம் நாட்டாமை திருமலைப் பிள்ளை திருமண மண்டபம் ஆகிய இடங்களில் இன்று (03.10.2021) நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. என்.இராமகிருஷ்ணன் (கம்பம்) அவர்கள், திரு. ஆ.மகாராஜன் (ஆண்பட்டி) அவர்கள், திரு. கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) அவர்கள் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து, கூடலூர் நகராட்சி குமுளி, தேவதானப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள், கொரோனா நோய்த் தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக தேனி மாவட்ட எல்லை பகுதியான குமுளி வாகன சோதனை சாவடி மற்றும் அதன் அருகே அமைக்கப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனை மையத்தில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, தமிழகத்தில் நான்காவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் இன்று காலை 7 மணிக்கு தொடங்கி 20,000-த்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்று வருகிறது. கடந்த முதல் முகாம், இரண்டாவது முகாம், மூன்றாவது முகாம் எந்த அளவிற்கு வெற்றி பெற்றதோ அதனை போன்று இன்று காலை முதலே முகாம்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல இடங்களில் வாக்குச்சாவடிகளில் தேர்தலின் போது வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வருகை தந்து, வரிசையில் நின்று வாக்களிப்பதை போன்று அனைத்து முகாம்களிலும் பொதுமக்கள் வரிசையில் நின்று தடுப்பூசியினை செலுத்திக் கொண்டு வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தடுப்பூசி முகாம் தொடர்பாக ஏற்படுத்திய விழிப்புணர்வு இன்றைய தினம் ஒரே நாளில் 20-க்கும், 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட அளவில் மிகப்பெரிய தடுப்பூசி திருவிழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த மாதம் 12.09.2021 அன்று 40,000-த்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற முதல் தடுப்பூசி முகாம்களில் 20 இலட்சம் தடுப்பூசிகள் செலுத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 22 இலட்சத்திற்கு மேற்பட்ட நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

19.09.2021 அன்று நடைபெற்ற இரண்டாவது தடுப்பூசி முகாம்களில் 15 இலட்சம் தடுப்பூசிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 16 இலட்சம் தடுப்பூசிகளும், கடந்த வாரம் நடைபெற்ற தடுப்பூசி முகாம்களில் 26 இலட்சம் அளவிற்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு, மாபெரும் வெற்றியை பெற்றுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் நான்காவது தடுப்பூசி முகாம் 20,000 மையங்களில் தொடங்கப்பட்டு, பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின்படி, கடந்த வாரம் வரை நடைபெற்ற தடுப்பூசி முகாம்களின் மூலம் மட்டுமே 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் இரண்டாவது தவணை செலுத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் முகாம்களின் மூலம் மாலைக்குள் இரண்டாவது தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தினை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேனி மாவட்டத்தை பொறுத்த வரை 18-வயது கடந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள தகுதியான நபர்கள் 10,44,558 என கண்டறியப்பட்டதில் 5,72,302 (54.80 சதவிகிதம்) நபர்கள் முதல் தவணை தடுப்பூசியும், 2,05,549 (19.70 சதவிகிதம்) நபர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் முதல் தடுப்பூசி முகாம்கள் 410 இடங்களில் நடத்தப்பட்டு, 63,645 நபர்களுக்கும், இரண்டாவது முகாம்கள் 30 இடங்களில் நடத்தப்பட்டு, 9,496 நபர்களுக்கும், மூன்றாவது முகாம்கள் 193 இடங்களில் நடத்தப்பட்டு 58,583 நபர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் நான்காவது முகாம்களின் மூலம் 225 இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு, 50,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிபா, ஜிகா போன்ற வைரஸ் காய்ச்சல்கள் தமிழகத்தில் ஊடுருவாமல் இருக்க பொள்ளாச்சி, கோவை பாளையாறு, திருநெல்வேலி போன்ற பல்வேறு பகுதிகளில் நடைபெறுக்கின்ற வாகன கண்காணிப்பு மற்றும் ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம் தமிழக, கேரளா எல்லை பகுதியான குமுளியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கேரளாவிலிருந்து வருகை தருகின்றவர்களுக்கு ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை சான்றிதழ் இல்லையென்றால் தொடர்ந்து தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான ஆவணங்களை பெற்று தமிழகத்திற்குள் அனுமதி அளித்திட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கொரோனா மற்றும் பல்வேறு நோய்த் தடுப்பு பணிகள் குறித்து பொதுமக்களிடையே உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது வடகிழக்கு பருவமழையை யொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான் முகாம் நடைபெறும் இடங்களுக்கு நேரடியாக சென்று களஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் தடுப்பூசி செலுத்துவதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து, போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றார்கள். எனவே, இதுபோன்ற தமிழக அரசின் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளின் போது, பெரியகுளம் சார் ஆட்சியர் செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி கௌசல்யா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெகவீரபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், தமிழக அரசின் முன்னாள் டெல்லி சிறப்பு பிரதிநிதி கம்பம் பெ.செல்வேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்,மூக்கையா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**